# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**CC.No.172/2025**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | முத்துவேல் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 07.02.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலர் 695 என்பவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2025 ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.ஜெயபாலன் அவர்களுடன் நானும், முதல்நிலைக்காவர் திரு.ரஞ்சித் ஆகிய இருவரும் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சுற்றுக்காவல் அலுவலாக ரகசிய தகவலின்பேரில் கண்ணங்குடி ஊரணி அருகே பார்த்தபோது அங்கு சந்தேகத்திற்கிடமான இரு சக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த நபர் போலீஸ் பார்ட்டி எங்களை கண்டதும் அங்கிருந்து தப்பிக்க எத்தனித்தும் அவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்கும்போது வைரவசுந்தரம், வயது 51, த.பெ.சாத்தையா, கண்ணங்குடி என்று தெரிவித்தார். பின்பு அவர் வைத்திருந்த இரு சக்கர வாகனத்தை சோதனை செய்யும்போது உட்காரும் சீட்டின் அடியில் உள்ள

பெட்டியில் சாக்குப்பையில் mensclub பிராண்டி 180ml அளவுள்ள 29 பாட்டில்களும் மற்றும் honeybi பிராண்டி 180ml அளவுள்ள 6 பாட்டில்கள் மற்றும் mensclub பிராண்டி 180ml அளவுள்ள 2 பாட்டில்கள் மூடி திறந்துள்ள நிலையில் இருந்தன. மேலும் இதை பற்றி விசாரிக்கும்போது மேற்படி நபர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் அரசு மதுபான கடையில் வாங்கி சுயலாபம் அடையும் நோக்கத்தோடு விற்றுள்ளார். மேலும் மூடி கிடைந்துள்ள 2 பாட்டில்களில் பாதி கேட்டு வருவபர்களுக்கு ஊற்றி கொடுத்தும், அடுத்து வருபவருக்கு பாதி ஊற்றி கொடுத்தும் விற்பனை செய்ததாக தெரிவித்தார். மேலும் சம்பவ இடத்தில் யாரும் சாட்சிகளா முன்வராத நிலையில் இருந்ததால் நானும் முதல் நிலைக்காவலர் ரஞ்சித் ஆகியோர் முன்னிலையில் சொத்துக்களை பறிமுதல் செய்து சாட்சியாக வைத்து அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் நானும் முதல் நிலைக்காவலர் ரஞ்சித் என்பவரும் கையெழுத்து செய்தோம். மேலும் மேற்படி நபரை நிலையத்திற்கு வருமாறு அறிவுறுத்தி அனுப்பப்பட்டது. மேற்படி நபரிடம் இருந்து கைப்பற்றிய சொத்துக்களை நிலையம் கொண்டு வர உதவி செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-ம் கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையொப்பம் அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** **(மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையொப்பம் அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நாங்கள் 3 பேரும் ஒரே காரில் சென்றோம். திரும்பிவரும்போது எதிரியை எங்கள் காரிலேயே அழைத்து வந்துவிட்டோமா என்றால் இல்லை. அங்கே விட்டு வந்து விட்டோம். நாங்கள் 3 பேரும்தான் காரில் திரும்ப வந்தோம். எதிரி எப்போது காவல் நிலையம் வந்தார், எப்போது கைது செய்யப்பட்டார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கண்ணங்குடியில் 6 ஊரணிகள் உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. எதிரியை எந்த இடத்தில் வைத்து, எந்த திசையில் வைத்து, யாருடைய இடத்திற்கு அருகில் வைத்து சுற்றி வளைத்து பிடித்தோம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் இல்லை. நாங்கள் காலை 9 மணிக்கு காவல் நிலையம் திரும்பினோம்.

நாங்கள் 3 பேரும் காரில் திரும்பிருந்தால் எதிரியின் இரு சக்கர வாகனத்தை கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் விபரங்கள் நிரப்பப்பட்ட கையெழுத்து யாருடையது என்றால் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்று தெரியுமா என்றால் தெரியாது. குடியரசு தினம், சுதந்திர தினம் என்பதற்காக மது சம்பந்தமாக வழக்குகள் புள்ளி விபரங்கள் காட்ட வேண்டும் என்பதற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.